**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் - 2017**

---

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் உப பிரிவு மற்றும் 1999 இன் 31 ஆம் இலக்க இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் உப பிரிவின் பிரகாரமான விபரமான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2018 யூலை 20 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 508,434,195 தொகையான அரசாங்க மானியத்துடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு 01 இன் கீழான கணக்கீட்டுக் கொள்கையின் மூலம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மாற்றீடு செய்யப்படுகின்ற பொருண்மையான பெறுமதியற்ற தொகைகளை கணக்கீடு செய்யாதிருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், பொருண்மையான எல்லை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணனிகள் மற்றும் துணைப்பாகங்களிற்காக முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 75,347 தொகையான குறைப் பெறுமானத்தேய்வுத் திருத்தம் முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தமை காரணமாக ஆண்டிற்கான இலாபம் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) வடக்கு விழக்கு மாகாண உள்ளுராட்சி சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தினால் (NELSIP) மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த 10 கணனிகளின் பெறுமதியான ரூபா 839,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 412,500 பெறுமதியான கையில் எடுத்துச்செல்லக்கூடிய 03 மடி கணனிகள் (laptop) கொள்வனவு செய்யப்படாதிருக்கையில் அச்சொத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அத்தொகையால் கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் கணக்கும் சில்லறை கடன்கொடுத்தோர் கணக்கும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) வடக்கு விழக்கு மாகாண உள்ளுராட்சி சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 987,178 பெறுமதியான 10 கணனிகளினதும் சேவர் (Server) இனதும் பெறுமதியினை மூலதன மானியங்கள் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக வருமானக் கூற்றிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கையில் அப்பெறுமதி முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கொள்வனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் 2015 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருந்த நாட்குறிப்புக்களிற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 492,000 தொகை 2017 ஆம் ஆண்டிலும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் கடன் கணக்கில் நீண்ட காலமாக நிலவி வந்திருந்த ரூபா 54,240 அசாதாரண செலவு மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வியாபாரக் கடன்பட்டோரிற்கான பின்னிணைப்பின் படி தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாக முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலவி வருகின்ற ரூபா 31,219 காட்டப்பட்டிருந்ததுடன், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் 2017 செப்தெம்பர் 18 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் ரூபா 61,430 செலுத்தப்படுதல் வேண்டுமெனக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் எவ்விதத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், கடன்கொடுத்தோராகவும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757(2) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பொருள் மெய்மைய்வினை மேற்கொண்டு பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிறுவகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென் பாகங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டல் | முறைப்படியான கொள்வனவுச் செயன்முறையிலிருந்து விலகி மீளாய்வாண்டில் ரூபா 3,110,500 பெறுமதியான 03 ஆராய்சிக் கற்கைகள் ஒப்பந்தங்களிற்காக மூன்று ஆட்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். |

(ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனங்களில் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1994 மார்ச் 08 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ பணிகளிற்காக பயன்படுத்தப் படுகின்ற வாகனங்கனளில் அரசாங்க இலச்சினையும் நிறுவனத்தின் பெயரும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 5,411,945 மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 4,805,575 பற்றாக்குறையானமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 10,217,520 இனால் முன்னேற்றமடைந்திருந்தது. ஆண்டிற்கான செயற்திட்ட வருமானம் ரூபா 9,524,436 ஆல் அதிகரித்தும் நிர்வாக செலவினம் ரூபா 735,384 ஆல் குறைவடைந்தும் இருந்தமையே மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்யை 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 8,575,023 ஆக காணப்பட்ட நிறுவனத்தின் பற்றாக்குறை 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 5,411,945 என்ற மிகை நிலைக்கு முன்னேற்றமடைந்திருந்தது. இருப்பினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 16,721,542 ஆகக் காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு அதிகரித்துச் சென்று 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 37,685,852 ஆக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடுதல்

நிறுவகத்தினால் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்படப்பட்டிருந்த செயற்பாடுகளின் அடைவுகளினது செயன்முன்னேற்றத்தை காலரீதியாக பரிசோதிப்பதற்கேற்ற வழிமுறையொன்று நிறுவனத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்திறன் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 22 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டின்போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி மோசடி தொடர்பில் முறையான ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மேலதிக பெண் பணிப்பாளர் மற்றும் உசாத்துணை பொறியியலாளர் ஆகிய நிறுவகத்தின் இரண்டு நிறைவேற்று உத்தியோகத்தர்களும் 2016 சனவரி முதல் அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த இரண்டு உத்தியோகத்தர்களிற்கும் 2017 ஆம் ஆண்டிற்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,534,320 செலுத்தப்பட்டிருந்தது. நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணியினர் கிரயமான ரூபா 11,597,372 தொகையில் இந்த இரண்டு உத்தியோகத்தர்களிற்குமான பங்களிப்பு 16 சதவீதமாக காணப்பட்ட போதிலும், வரிசை அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து நிறுவனத்தின் செயலாற்றலிற்கு எவ்விதப் பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரிசை அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் இந்த உத்தியோகத்தர்களின் போக்குவரத்து மற்றும் தொலைபேசிப் படிகள் செலுத்தப்படுதல் நிறுவனத்தினால் நிறுத்தப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் SCFR 233/2017 ஆம் இலக்க வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தினால் இதற்காக தோற்றுவதற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 375,000 இதுவரை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த நிதி மோசடி தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த நிதி மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்படியான ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் 2017 யூலை 21 ஆந் திகதி ஆளுகைச் சபை குறித்த சாரதியினை சேவையிலிருந்து இடைநிறுத்துவதற்கும் குற்றவாளியான சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) இலங்கை சநனாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் II ஆம் பகுதியிலுள்ள XLVII ஆம் அத்தியாயத்தின் 23.9 ஆம் பிரிவின் பிரகாரம் தவறிழைத்த உத்தியோகத்தருக்கு தண்டனை வழங்க வேண்டிய திகதி தவறிழைத்த திகதியாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன்படி செயற்படாது ஆளுகைச் சபையின் கூட்டத் திகதியான 2017 யூலை 21 ஆந் திகதி முதல் சேவையிலிருந்து இடைநிறுத்துதல் என்ற தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை காரணமாக சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த காலப்பகுதிக்காக ரூபா 539,128 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) அத்துடன், 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் படி ஊழியர் ஒருவரினால் தொழில்தருனர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட நட்டம் அல்லது இழப்பின் அளவிற்கு பணிக்கொடை உரித்தற்றதாக்கப்பட்ட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாமை காரணமாக ரூபா 187,596 அவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, செலுத்தப்பட்டிருந்த ரூபா 726,724 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விரிவுரைகளிற்காக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற வெளிவாரி வளவாளர்களிற்காக ஆளுகைச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் உள்ளடக்கப்பட்டிருந்த பாடவிதானம் தொடர்பில் ஆளுகைச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முறைப்பாடியான ஒழுக்காற்று விசாரணையில் குற்றவாளியாக முடிவுசெய்யப்பட்டு ஆளுகைச் சபையினால் பதவிநீக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இருவரிற்காக மீளாய்வாண்டிற்குரிய பணிக்கொடைக்காக ரூபா 51,391 ஒதுக்கப்பட்டிருந்தது.

(எ) பதிவி நீக்கம் செய்யப்பட்ட மற்றும் பதிவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பின்னர் மரணித்திருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 623,297 கடன் தொகையினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. பதிவியினை இராஜினாமா செய்திருந்த 16 உத்தியோகத்திர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 92,016 கடன் மீதியினை நீண்டகாலமாக அறவிட முடியாத நிலையிலிருந்தது.

(ஏ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள இறுதி இருப்பின் பெறுமதியான ரூபா 1,686,163 தொகையில் முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 1,517,202 தொகையான பயன்படுத்தப்படாத பிரசுரங்களை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.3 இயக்கச் செயற்பாடுகள்**

மீளாய்வாண்டில் வரிசை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மீண்டெழும் நிதிஏற்பாடு ரூபா 35,000,000 மற்றும் பயிற்சியளித்தல் செலவினத்திற்கான மூலதன நிதி ஏற்பாடு ரூபா 57,250,000 ஆகியவற்றிலிருந்து ரூபா 30,200,000 அல்லது 53 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. வரிசை அமைச்சினால் மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் நிதிஏற்பாட்டின் சேமிப்புக்கான காரணங்களாக மதியுரைஞர்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் புதிய

உறுப்பினர்களை நியமித்தலில் தாமதம் என்பன குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களிற்குப் பயற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் இனங்காணப்படாதிருந்ததுடன், மதியுரைஞர்களின் பற்றாக்குறையினை தீர்ப்பதற்காக வெளிவாரி வளவாளர்களை பயன்படுத்த முடியுமாக இருந்தது.

### 4.4 முறைப்படியான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்தில் செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியொன்று காணப்படாத போதிலும், பணிப்பாளரினால் செயற்பாட்டுப் பணிப்பாளர் என்ற வகையில் மாதத்திற்கு ரூபா 60,000 வீதம் கடந்த ஆண்டின் 08 மாதங்களிற்காக ரூபா 480,000 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதில் ரூபா 100,000 தொகை 2017 மார்ச் 22 ஆந் திகதி மீளளிக்கப்பட்டிருந்தது.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிறுவகத்தின் பதவியணியினருக்கு கடன்களை வழங்குவதற்காக செயற்பாடுடைய நிதியமொன்றாக இயங்க வேண்டிய தேசிய சேமிப்பு வங்கியில் பேணப்பட்டு வருகின்ற சேமிப்புக் கணக்கில் 2017 சனவரி 01 ஆந் திகதியில் காணப்பட்ட மீதி ரூபா 4,399,788 ஆனதுடன் இத்தொகையினை முதலீடு செய்யாமை அல்லது நிலையான வைப்புக்கு மாற்றாமை காரணமாக குறைப்பயன்பாட்டில் காணப்பட்டது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 49 ஆனதுடன், உள்ளபடியான எண்ணிக்கை 36 ஆக இருந்தது. 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆளுகை நிறுவக அதிகாரச்சிட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களின் அடிப்படையில் நிறுவகத்திற்குப் பொருத்தமானதோர் பதவியணியினை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நீண்டகாலமாக நிலவிவருகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்தல்.

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆளுகை நிறுவகத்தினால் அதனது விடயப்பரப்பிற்கு உட்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்படுதல் வேண்டுமென அறிந்திருக்கவில்லை.

மேற்குறிப்பட்டவாறு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் உள்ளூராட்சி ஆளுகை நிறுவகத்தினால் அறிந்து வைத்திருக்கப்படாமை காரணமாக அதனது செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வழிவகைகளையும் இலக்ககளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தினால் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், வேறெந்த உத்தியோகத்தரும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருக்காமை காணமாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் ஒவ்வொரு நியதிச்சட்டக் கூட்டுத்தாபனத்தினாலும் குறித்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட்டு ஆளுகைச் சபையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அந்தப் பாதீட்டில் மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றும், ஐந்தொகையும் காசுப் பாய்ச்சல் கூற்றும் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டுமென அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆளுகை நிறுவக அதிகாரச்சிட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் மகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை பயிற்றுவித்தல், ஆய்வுகளை நடாத்துதல் மற்றும் மதியுரைச் சேவைகளை வழங்குதல் என்பன நிறுவகத்தின் பிரதான பணிகளாகும். அதற்கமைய நிறுவகத்தின் செயற்பாட்டுச் செலவினத்தை மதிப்பீடு செய்கையில் நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளான பயிற்சியளித்தல் உள்ளிட்ட ஆராய்ச்சிகள் மற்றும் மதியுரைச் சேவைகளை கருத்திலெடுத்து மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்குப் பதிலாக மூலதனச் செலவினத்தின் கீழ் மனிதவள அபிவிருத்திக்காக ரூபா 57,250,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 6.3 வருடாந்த அறிக்கையினை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.4 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் விலை மனுக்களை அழைப்பதன் மூலம் ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்வதனூடாக நிறுவனத்திற்கு 04 மாடிக் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கு ரூபா 53,196,907 தொகைக்கு ஒப்பந்த உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததுடன் பிரதான ஒப்பந்தகாரரால் துணை ஒப்பந்தகாரர் ஒருவருக்கு நிர்மாணத்தின் தூண்கள் மற்றும் கட்டடத்தின் அடித்தள வேலைகள் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 நவம்பர் 04 இல் 04 மாடிகளுக்கு முன்மொழியப்பட்ட கட்டடத்தினை 08 மாடிகள் வரை நீடிக்க நிறுவனத்தின் ஆளுகை சபை நிர்மாணித்து பிரதான ஒப்பந்ததாரருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்த போதிலும், அது தொடர்பில் பிரதான ஒப்பந்ததாரர் துணை ஒப்பந்ததாரருக்கு அறிவிக்காமை காரணமாக 04 தளங்களுக்கு மாத்திரம் போதியளவானதாக நிலம் துளையிடப்பட்டு அத்திவாரமிடப்பட்டிருந்தது.

(ii) நிறுவனத்தின் நிலத்தினை துளையிட்டு அத்திவாரமிடும் பணிகளின் கண்காணிப்பிற்காக மதியுரையாளர் நிறுவனமொன்று அல்லது நபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. துணை ஒப்பந்ததாரர்களின் மேற்பார்வை செலவினமாக ரூபா 755,709 தொகை பற்றுச்சீட்டுக்களினை வேலையின் மேற்பார்வைக்கு ஒப்பந்ததாரர் சமர்ப்பித்திருந்த போதிலும், பூர்த்தியாக்கப்பட்ட தூண்கள் தொடர்பில் எவ்வித தொழில்நுட்ப பரீட்சிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் துணை ஒப்பந்ததாரரினால் அவ் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டிருக்காததுடன் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) நிர்மாணிக்கப்பட்ட தூண்களின் பரீட்சிப்பின்றி ஒப்பந்ததாரர்க்கு ரூபா 38,147,381 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் தூண் தொப்பிகள் (Pile Cap) போடப்பட்டு தூண்கள் இணைக்கப்பட்டதன் காரணமாக, பின்னர் பரீட்சிப்பதற்கு சாத்தியமற்ற நிலையொன்றில் அவை காணப்படுகின்றன.

(iv) நிறுவனத்தில் தூண் தொப்பிகளைக் (Pile Cap) கொண்டிராத 02 தூண்களுக்கு மாத்திரம் பின்னர் பீடீஏ (PDA) பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு தூணில் வேண்டப்பட்ட தரம் உள்ளடக்கப்பட்டுக் காணப்படாமை உறுதிப்படுத்தப்பட்டதுடன் மீதமான அனைத்து தூண்களின் தரம் உறுதிப்படுத்தப்படவில்லை. அதற்கமைய, நிறுவனம் ஏற்றுக்கொண்டதிலிருந்து அவற்றின் மீதான நிர்மாணிப்புக்கு பொருத்தமற்றதாக காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், ஏற்பட்ட செலவீனம் ரூபா 44,757,072 தொகை சிக்கனமற்ற செலவினமொன்றாகியது.

### 6.5 சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கழிவு முகாமைத்துவம் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதான பணியான போதிலும், அது தொடர்பான எவ்வித பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயலமர்வுகள் இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவகத்தினால் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு சரியான முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| கணக்கீடு | பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்கையில் குறைபாடுகள் காணப்பட்டமை. |
| புதவியணியினர் நிர்வாகம் | தனிப்பட்ட கோவைகள் உரியவாறு பேணப்பட்டிராமை, சம்பள ஏற்றங்கள் வழங்கப்படாமை, ஒழுக்காற்று நடவடிக்கைகள் உரிய விதத்தில் மேற்கொள்ளப்படாமை மற்றும் நிறுவனத்திற்குப் பொருத்தமான விதத்தில் ஆட்சேர்ப்புத் திட்டத்தினை திருத்திக் கொள்ளாமை. |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நிறுவகத்தின் தற்போதைய பதவியணியிடமிருந்து உச்ச பங்களிப்பினை பெற்றுக்கொள்ளாமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட படிகளின் அடிப்படையில் வெளிவாரி வளவாளர்களை ஈடுபடுத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதில் குறைபாடுகள் காணப்படுகின்றமை. |